Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register CC. 278/2016
Sessions prosecution
depositions of witness for Pw5 Chief and Cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.25 Pm – 1.40 pm |
| Name | : | திரு. மாதேவன் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24th day of February 2026.
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )
சாட்சி மனுவின் பேரில அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு
சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

1) நான் தற்போது உத்தன்ப்பள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நிலையத்தில் நிலுவையில் இருந்து வரும் CC.No. 278/2016 வழக்கு விவரங்கள் கோப்புகள் அடிப்படையில் எனக்கு தெரியும். எனவே நான் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.08.2010-ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் சம்பூர்ணம் நிலைய பொறுப்பில் இருந்த போது பழனிசாமி மகன் பாலாஜி என்பவர் நிலையம்

ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 99/2010, இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ–2ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட காவல் ஆய்வாளர் தங்கவேல் அவர்கள் 10.08.2010–ம் தேதி 6.00 மணிக்கு ஒசூர் ராயக்கோட்டை ரோடடில் உத்தனப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி அருகில் அமைந்த சம்பவயிடத்தை சாட்சிகள் இளங்கோவன் , மயில்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது .**

2) இவ்வழக்கில் இறந்த ராஜா(எ) சிவக்குமார் என்பவரது உடலின் மீது ஒசூர் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் பாலாஜி, சோமசுந்தரம் , சுரேந்திரன் பஞ்சாயத்தார் சாட்சிகள் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் தொடர்புடைய வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ஜெயசங்கரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கைகளை பெற்றார். **வேகனார் கார் ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகவும் TVS விக்டர் வாகனத்தின் ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் மகேஷ் என்பவரை விசாரித்து பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.8 குறியீடு செய்யப்படுகிறது.** 10.08.2010–ம் தேதி 12.00 மணிக்கு நிலையத்தில ஆஜரான எதிரியை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த காவலர் மாதேஷ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த உதவி ஆய்வாளர் சம்பூர்ணம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கையை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கில் இறந்துபோன நபருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யவில்லை. வழக்கில் இறந்துபோன நபர் தலைக்கவசம் அணிந்திருத்தரா என்ற விவரம் கோப்புகளின் அடிப்படையில் தெரியுமா என்றால் தலைக்கவசம் அணிந்திருத்தாக கோப்புகளில் காணப்படவில்லை. சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 1 ½ கிலோ மீட்டர் இருக்கும். புகார்தாரர் இரவு 11.00 மணிக்கு காலதாமதமாக புகார் கொடுத்தற்கான காரணம் என்ன என்றால் மருத்துவமனைக்கு எடுத்து சென்று புகார் கொடுத்ததால் காலதாமதாமாக ஏற்பட்டுள்ளது.

2) பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகள் இறந்தவரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் மாலை 04.15 மணி என்றும் அது பள்ளி முடியும் நேரம் என்றும் அந்த நேரத்தில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றும் அங்கு தனிநபர் சாட்சிகளை நேரில் பார்த்த சாட்சிகளை விசாரித்து இருக்கலாம் என்றும் சொன்னால் அங்கு தனிநபர் சாட்சி யாரும் இல்லை. பள்ளியிடம் என்பதால் அங்கு வேகத்தடை உள்ளது என்றால் அந்த காலத்தில் இருந்ததா என்று எனக்கு தெரியவில்லை. அங்கு வேகத்தடை உள்ளது என்றும் விபத்து ஏற்பட்டதற்கு இறந்து போன நபர் தான் காரணம் என்றும் எதிரி காரணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்து போன நபர் தலைக்கவசம் அணியாததால் தான் தலையில் அடிப்பட்டு ரத்த போக்கு ஏற்பட்டு இறந்துள்ளார் என்றும் எதிரிக்கும் இந்த விபத்துக்கு சம்மந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

இறந்த போன நபருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாததால் அவர் தவறாக வந்து எதிரியின் மீது இடித்து விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.